மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருக்கழுகுன்றத்திலிருந்து மாமல்லபுரத்திற்குக் காலையில் 4 நடைகளும், மாலையில் 4 நடைகளும், அதேபோல் மாமல்லபுரத்திலிருந்து திருக்கழுகுன்றம் வழியாக செங்கல்பட்டுக்கு காலையில் 4 நடைகளும், மாலையில் 6 நடைகளும் பேருந்து வசதிகள் செய்யப்பட்டு இயக்கப்படுகின்றன. பல்வேறு இடங்களிலிருந்து திருக்கழுகுன்றம் வழியாக மாமல்லபுரம் வரை 15 அரசுப் பேருந்துகள்மூலம் 90 நடைகளும், 8 தனியார் பேருந்துகள்மூலம் 34 நடைகளும் தினசரி இயக்கப்படுகின்றன. மேலும், மாமல்லபுரம்–செய்யாறு–வழி திருக்கழுகுன்றம், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் என்ற புதிய வழித்தடத்தின்மூலம் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க 31–3–2012 முதல் 4 நடைகள் காலை மற்றும் மாலை வேளைகளில் இயக்கப்படுகின்றன என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. மனோகரன், இருக்கையில் இல்லை.

வினா வரிசை எண் 406, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

406—

மாணவியர் விடுதி

*__14981—திரு. ஆர். சாமி:__

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, மேலூரிலுள்ள அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மாணவியர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2013 மே 6]

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மதுரை மாவட்டம், மேலூர் தொகுதி, மேலூர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை சார்பில் மாணவியர் விடுதி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி அவர்கள்.*

திரு. ஆர். சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலே தமிழ்நாட்டை முதல் மாநிலமாக்குவதற்கு எவ்வளவுதான் அரசு நிதியிலிருந்து உதவி செய்தாலும், அதை வைத்து அந்தக் குடும்பங்கள் முன்னேற முடியாது. அந்த வீட்டிலிருக்கின்றவர்களே வேலை பார்த்து அந்தக் குடும்பத்தை முன்னேற்ற வேண்டுமென்பதற்காக இந்திய அரசியல் வரலாற்றில் எந்தவொரு முதலமைச்சருக்கும் வராத எண்ணம், எந்தவொரு பிரதமருக்கும் வராத எண்ணம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குத் தோன்றியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 10–50

ஒட்டுமொத்த தமிழ்நாட்டில் இருக்கின்ற ஏழையெளிய, கிராமப்புறத்தில் இருக்கின்ற மாணவ, மாணவியர்கள் எல்லாம், அந்த ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்கள் வீட்டில் இரண்டு மாணவிகள் இருந்தாலும் அவர்கள் படித்து பட்டம் பெற்று வேலைக்குச் சென்றால்தான் அந்தக் குடும்பத்திற்கு வருவாய் வரும். அந்த வருவாயை வைத்து அந்தக் குடும்பம் முன்னேறும் என்பதற்காக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தியாவிற்கே எடுத்துக்காட்டாக, இன்றைக்குக் கல்வித் துறையை முதன்மைத் துறையாகக் கொண்டு செல்வதற்குச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

மேலூர் தொகுதியில் இருக்கின்ற அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியைப் பொறுத்த அளவில் ஏறத்தாழ 2,947 மாணவிகள்

படித்து வருகிறார்கள். அதிலே குறிப்பாக, ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த மாணவிகள் 600 பேர்களும் மற்றும் 2,343 பொதுப் பிரிவைச் சேர்ந்த மாணவிகளும் படித்து வருகிறார்கள். இதிலே கஸ்தூர்பா ஆதி திராவிடர் மாணவியர் விடுதியில் 200 மாணவிகளுக்கு மட்டும் Admission போடப்பட்டு விடுதி இயங்கிக் கொண்டு வருகின்றது. ஆனால், பொதுவாக இருக்கின்ற பிற்படுத்தப்பட்ட பிரிவைச் சேர்ந்த, மாணவிகளுக்காக அங்கே தங்கும் வசதி கிடையாது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் கல்வித் துறையிலே இன்றைக்கு ஒரு பெரும் புரட்சியை ஏற்படுத்தி, ஏழை, பணக்காரன் பேதம் இருக்கக்கூடாது என்ற நிலையை ஏற்படுத்தி வருகிறார்கள். கடந்த கால ஆட்சியிலே எல்லாம் தனியார் பள்ளியைத் தேடி போக வேண்டிய நிலைமை இருந்தது. ஆனால், இன்றைக்கு அதே மாணவர்கள் அரசாங்கப் பள்ளியைத் தேடி வரக்கூடிய அளவுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கல்வித் தரத்தை உயர்த்தியிருக்கிறார்கள். இதற்குக் காரணம் இன்றைக்குக் கல்விக்கூடங்களுக்குப் புதிய கட்டடம், குடிநீர் வசதி, toilet வசதி போன்ற எல்லா வசதிகளையும் செய்து கொடுத்துள்ளார்கள். காலுக்குப் போடுவதற்கு காலணியிலிருந்து கொண்டு போவதற்கு bag வரைக்கும் நம்முடைய முதலமைச்சர் அம்மா அவர்கள் அறிவித்தத் திட்டத்தால் இன்றைக்கு வசதி படைத்தவர்கள்கூட அரசாங்கப் பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய இப்படிப்பட்ட ஆட்சிக் காலத்தில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, மேலூர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு ஒரு புதிய விடுதியை அமைத்துத் தர ஆவன செய்வார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கேயோ கோடியில் கிடந்த இந்தத் துறைக்கு பல கோடி ரூபாய்க் கணக்கில் சிறப்பானத் திட்டங்களை அளித்து, மிகவும் உன்னதமான உயர்ந்த இடத்திற்கு இந்தத் துறையை மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உயர்த்தி சாதனை புரிந்துள்ளார்கள். (மேசையைத் தட்டும்

2013 மே 6]

ஒலி) அந்த வகையில், மதுரை மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை சார்பில், 21 பள்ளி மாணவியர் விடுதிகள், 7 பள்ளி மாணவர்கள் மற்றும் 4 கல்லூரி விடுதிகள் உட்பட 32 விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. இவை தவிர, மதுரை மாவட்டத்தில் 5 கள்ளர் பள்ளி மாணவியர்கள் விடுதி மற்றும் 24 கள்ளர் சீரமைப்புப் பள்ளி விடுதிகளும் செயல்பட்டு வருகின்றன. எனினும், மேலூரில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை சார்பில் மாணவியர் விடுதி தொடங்க தேவை இருப்பின், மாண்புமிகு தமிழகத்தின் ஒப்பற்ற முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, அவர்களின் ஆணைக்கிணங்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 407, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

407—

சுனாமி எச்சரிக்கை மையம்

***22337—திருமதி எஸ். விஜயதரணி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரியில் சுனாமி எச்சரிக்கை மையம் அமைக்கும் பணியை விரைந்து முடிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. என்.டி வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகிறேன்.*

உலக வங்கி நிதி உதவியுடன் பேரிடர் அபாயம் குறைக்கும் திட்டத்தின் மூலமாக பேரிடர் முன்னெச்சரிக்கை செய்யும் கருவி அமைக்க கன்னியாகுமரி மாவட்டமும் தெரிவு செய்யப்பட்டு, ஆயத்தப் பணிகள் நடந்து முடிந்துள்ளன. முன்னெச்சரிக்கைக்